V8T

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

-----

## வகுப்பு 8

காலம்: 2.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க:** **10×1=10**

1) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது .................
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

2) 'கோயிலப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) கோ+அப்பா ஆ) கோயில்+லப்பா இ) கோயில்+அப்பா ஈ) கோ+இல்லப்பா

3) கற்றவருக்கு அழகு தருவது .................
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

4) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று .................
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

5) காந்தியடிகள் ................. போற்ற வாழ்ந்தார்.
அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

6) நீலகேசி கூறும் நோயின் வகைகள் .................
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

7) புகழாலும் பழியாலும் அறியப்படுவது .................
அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

8) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ................. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

9) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .................
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

10) பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது .................
அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5×1=5**

11) கலப்பில் ................. உண்டென்பது இயற்கை நுட்பம்.
12) ஆயுத எழுத்து பிறக்கும் இடம் .................
13) சேகரம் என்பதன் பொருள் .................
14) புற உலக ஆராய்ச்சிக்கு ................. கொழுகொம்பு போன்றது.
15) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .................

**இ) பொருத்துக:** **5×1=5**

16) மூன்றாம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்
17) நான்காம் வேற்றுமை - பாரியினது தேர்
18) ஐந்தாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்
19) ஆறாம் வேற்றுமை - காமராசர் பதவியைத் துறந்தார்
20) இரண்டாம் வேற்றுமை - ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

### பகுதி - II

**குறுகிய விடையளி:**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

21) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
22) 'அழகிய மரம்' - எச்ச வகையை விளக்குக.
23) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
24) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன் தேவையில்லை?
25) சான்றோர்க்குப் புகழாவது யாது?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

26) இன்றைய கல்வி நிலை பற்றி திரு.வி.க. கூறுவன யாவை?
27) மருத்துவம் எப்போது தொடங்கியது?
28) நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
29) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
30) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

Padasalai.Net

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×2=4**

31) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

32) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

33) மெய்யெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

## பகுதி - III

**அ) சிறுவினா:** **3×4=12**

34) தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக. **(அல்லது)**
நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

35) தமிழ் வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக. **(அல்லது)**
எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

36) எழுவாய் வேற்றுமையை விளக்குக. **(அல்லது)**
ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

**ஆ) சிந்தனை வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **2×5=10**

37) நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

38) கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

39) நீர் வளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

## பகுதி - IV

**அடிபிறழாமல் எழுது:** **4+2=6**

40) 'உடலின் உறுதி .......' எனத் தொடங்கும் கவிமணி பாடலை '....... ஆயுள் பெறுவாயே' வரை எழுதுக.

41) 'விலங்கொடு .........' எனத் தொடங்கும் குறள்.

## பகுதி - V

**மொழிப்பயிற்சி: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **4×2=8**

42) **கலைச்சொல் தருக:**
அ) Talent
ஆ) Bud

43) **உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக:**
கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்

44) **உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க:**
உடலும் உயிரும் போல

45) **தமிழ் எண்ணுரு எழுதுக:**
அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16.
ஆ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3.

46) **வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக:**
அ) நடக்கிறது - .............
ஆ) வருக - .............

47) **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**
அ) யானை ............. (பிளிறும் / கதறும்)
ஆ) புலி ............. (குட்டி / பறழ்)

## பகுதி - VI

**விரிவான விடையளி:** **3×8=24**

48) மூளையில் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.
**(அல்லது)**
தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

49) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்து சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
காப்பியக் கல்வி குறித்து திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

50) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**
முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை. **(அல்லது)**
விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

----------

Padasalai.Net